සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | 01 - 04 | |
| 02 | 05 - 11 | |
| 03 | 12 - 16 | |
| 04 | 17 - 23 | |
| 05 | 24 - 30 | |
| 06 | 31 - 37 | |
| 07 | 38 - 44 | |
| 08 | 45 - 50 | |
| மொத்தம் | | |

சுட்டெண் : ..................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

**1.** பின்வருவனவற்றுள் எது ஓர் உற்பத்திக் காரணி **அல்லாதது** ?
(1) இயற்கை வளங்கள்
(2) மனித வளங்கள்
(3) மூலதனம்
(4) பணம்
(5) முயற்சியாண்மை (......)

**2.** அருமை தொடர்பான பிரச்சினையானது,
(1) அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் மட்டும் காணப்படுகின்றது.
(2) சந்தைப் பொருளாதாரங்களில் மட்டும் காணப்படுகின்றது.
(3) பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் மிகவும் கூடுதலாக இருப்பதால் காணப்படுகின்றது.
(4) தற்போது காணப்படுகின்றது; ஆனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது இல்லாமற் செய்யப்படும்.
(5) வளங்கள் வரையறுக்கப்பட்டனவாக இருப்பதால் காணப்படுகின்றது. (......)

**3.** ஓர் உற்பத்தி சாத்திய வளையி உருவாக்கத்தில் பின்வருவனவற்றில் எது எடுகோளாகக் கொள்ளப்படுகின்றது ?
(1) பொருளாதாரமானது அதன் வளங்களை வினைத்திறனற்ற வகையில் பயன்படுத்துகின்றது.
(2) வளங்கள் தனியார் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
(3) பூரண உற்பத்தி அல்லாமல் நிறைதொழில் மட்டம் உணரப்படுகின்றது.
(4) உற்பத்தித் தொழினுட்பமானது நிலையானதாகக் காணப்படுகின்றது.
(5) பொருளாதாரத்தில் பணவீக்கம் காணப்படவில்லை. (......)

**4.** ஒரு பொருளாதாரமானது உற்பத்தி வினைதிறனை அடைந்துள்ளமையைக் காட்டுவது,
(1) அப்பொருளாதாரம் மற்றொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாமல் உள்ளபோது
(2) ஒவ்வொரு பொருளையும் உற்பத்திசெய்யும்போது ஏற்படும் எல்லைச் செலவானது அதன் விலைக்குச் சமமாக உள்ளபோது
(3) அப்பொருளாதாரம் அனைத்து எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளையும் இல்லாமல் செய்துள்ளபோது
(4) சமூகத்தினால் அதிகம் விரும்பப்படும் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்காக வளங்கள் ஒதுக்கப்படுகின்றபோது
(5) அப்பொருளாதாரம் அனைத்து உற்பத்திப்பொருட்களிலும் தன்னிறைவினைக் கொண்டுள்ளபோது (......)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


5. 'எதனை உற்பத்திசெய்தல்' மற்றும் 'யாருக்காக உற்பத்திசெய்தல்' ஆகிய அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் அடிப்படையில் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. ஏனெனில்,
(1) வெவ்வேறு வருமான பங்கீட்டு வடிவங்கள் வெவ்வேறு கேள்வி வடிவங்களை உருவாக்குவதனால் அதற்கேற்ற விதத்தில் வள ஒதுக்கீட்டு வடிவங்களும் வேறுபடுகின்றன.
(2) உற்பத்தி முறைகளின் வெவ்வேறு வடிவங்கள் வருமானப் பங்கீட்டின் வெவ்வேறு வடிவங்களை உருவாக்குகின்றன.
(3) சமூகத்தில் பொருளாதாரப் பலமுடைய பிரிவினரிடத்தில் வருமானமும் செல்வமும் குவிந்துள்ளன.
(4) வளங்களை வினைத்திறனாக ஒதுக்குவதற்கு சந்தைகளை நம்பியிருக்க முடியாது.
(5) ஒரு குறிப்பிட்ட அளவு வெளியீடானது உள்ளீடுகளின் பல்வேறு சேர்க்கைகளினால் உற்பத்திசெய்யப்படலாம். (......)

6. ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் பிரதான தொழிற்பாடு யாதெனில்,
(1) முயற்சியாளர்களுக்கு அதிக இலாபத்தினை உருவாக்குவது
(2) முதலீட்டு வாய்ப்புக்களைத் தெரிவுசெய்வது தொடர்பாக வீட்டுத்துறையினருக்கு வழிகாட்டுவது
(3) கேள்வி வளையிகளின் நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பது
(4) வருமானப் பங்கீட்டினை மேம்படுத்துவது
(5) மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையே அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வது (......)

7. பின்வரும் எந்தக் காரணியில் ஏற்படும் மாற்றமானது ஒரு பொருளுக்கான சந்தைக் கேள்வி வளையியினை மாற்றமடையாமல் அப்படியே இருக்கச் செய்யும் ?
(1) சனத்தொகை
(2) அப்பொருளின் விலை
(3) பதிலீட்டுப் பொருளின் விலை
(4) இணைப்புப் பொருளின் விலை
(5) வீட்டுத்துறையினரின் சராசரி வருமானம் (......)

8. கேள்வியின் வருமானம் மற்றும் விலை நெகிழ்ச்சிகளைக் காட்டும் பின்வரும் சேர்க்கைகளில் எது ஒரு கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியினைக் கொண்டுள்ள ஒரு சாதாரண பொருளுடன் இசைந்து செல்வதாக உள்ளது ?

| | கேள்வியின் வருமான நெகிழ்ச்சி | கேள்வியின் விலை நெகிழ்ச்சி |
|---|---|---|
| (1) | எதிர்க்கணியம் | நேர்க்கணியம் |
| (2) | நேர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| (3) | எதிர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| (4) | நேர்க்கணியம் | நேர்க்கணியம் |
| (5) | எதிர்க்கணியம் | பூச்சியம் |

(......)

9. A, B ஆகிய இரண்டு பொருட்கள் மட்டும் காணப்படுவதாகவும் நுகர்வோனின் பண வருமானம் உள்ளிட்ட ஏனைய காரணிகள் மாற்றமடையாமல் அப்படியே உள்ளதாகவும் கருதுக. A பொருளின் விலை வீழ்ச்சியடையும்போது B பொருளுக்கான கேள்வி அதிகரிக்குமானால் நாம் பின்வரும் எந்த முடிவிற்கு வரலாம் ?
(1) A ஒரு சாதாரண பொருள்
(2) A யும் B யும் சாதாரண பொருட்கள்
(3) A ஓர் இழிவுப் பொருள்
(4) B ஓர் இழிவுப் பொருள்
(5) B ஒரு சாதாரண பொருள் (......)

10. அரிசிக்கான விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பாணிற்கான கேள்வியை 30% ஆல் அதிகரிக்கச் செய்துள்ளது. அரிசிக்கும் பாணிற்கும் இடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியானது 3.0 ஆகும். அரிசியின் விலையில் ஏற்படும் எந்த மாற்றம் இவ்விளைவினை ஏற்படுத்தியுள்ளது ?
(1) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 80 இலிருந்து 90 இற்கு அதிகரித்தல்
(2) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 60 இலிருந்து 72 இற்கு அதிகரித்தல்
(3) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 80 இலிருந்து 85 இற்கு அதிகரித்தல்
(4) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 70 இலிருந்து 80 இற்கு அதிகரித்தல்
(5) ஒரு கிலோகிராமின் விலை ரூபா 80 இலிருந்து 88 இற்கு அதிகரித்தல் (......)

11. நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் அளவை விடவும் நடைமுறையில் உள்ள விலையில் உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் அதிகமாக விற்பனை செய்ய விரும்பினால் அச்சந்தை தொடர்பில் பின்வருவனவற்றில் எது உண்மையாகும்?
(1) கேள்வி கூடியளவு நெகிழ்ச்சியற்றது.
(2) நிரம்பல் கூடியளவு நெகிழ்ச்சியுடையது.
(3) இது ஓர் இழிவுப்பொருளாகும்.
(4) பொருளுக்கு உயர்ந்தபட்ச விலை விதிக்கப்பட்டுள்ளது.
(5) பொருளுக்கு குறைந்தபட்ச விலை விதிக்கப்பட்டுள்ளது. (......)

[பக். 3 ஐப் பார்க்க


Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

12. குறித்தவொரு நுகர்வுப் பொருளின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

கேள்வி $(Q_D) = 80 - 2P$ நிரம்பல் $(Q_S) = -20 + 3P$

அவ்வாறாயின் சமனிலைத் தொகையும் சமனிலை விலையும்
(1) 40 அலகுகள் மற்றும் ரூபா 20 ஆகும்.
(2) 56 அலகுகள் மற்றும் ரூபா 12 ஆகும்.
(3) 50 அலகுகள் மற்றும் ரூபா 15 ஆகும்.
(4) 60 அலகுகள் மற்றும் ரூபா 10 ஆகும்.
(5) 40 அலகுகள் மற்றும் ரூபா 120 ஆகும். (......)

13. பின்வரும் வரைபடமானது ஒரு குறிப்பிட்ட நுகர்வுப் பொருளுக்கான ஒரு நிறைபோட்டிச் சந்தையினைக் குறிக்கின்றது.




அரசாங்கத்தினால் சந்தையில் இப்பொருள் மீது சிறப்பு வரி (அலகு வரி) விதிக்கப்படுமானால் வரியின் பின்னர் உற்பத்தியாளர் மிகையினளவு
(1) A + B + F
(2) B + E + C + F + D
(3) C + F + D
(4) D
(5) E + F + H (......)

14. நிரம்பல் விலை நெகிழ்ச்சி ஒன்றை விடக் குறைவாகக் காணப்படுமானால் அதன் கருத்து,
(1) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட மாற்றமானது விலையில் ஏற்பட்ட மாற்றத்தை விடவும் அதிகமானதாகும்.
(2) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றமானது விலையில் ஏற்பட்ட வீதாசார மாற்றத்தை விடவும் அதிகமானதாகும்.
(3) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட மாற்றமானது விலையில் ஏற்பட்ட மாற்றத்தை விடவும் குறைவானதாகும்.
(4) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றமானது விலையில் ஏற்பட்ட வீதாசார மாற்றத்தை விடவும் குறைவானதாகும்.
(5) நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றமானது விலையில் ஏற்பட்ட மாற்றத்தை விடவும் குறைவானதாகும். (......)

15. ஒரு நிறைப்போட்டிச் சந்தைக்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுவதாகக் கருதுக.

கேள்வி $(Q_D) = 60 - 2P$ நிரம்பல் $(Q_S) = -20 + 3P$

மேலுள்ள சமன்பாடுகளில் $Q_D$, $Q_S$ என்பன முறையே கேள்வித் தொகையையும் நிரம்பல் தொகையையும் குறிப்பதோடு P விலையினைக் குறிக்கின்றது. மேலும் அரசாங்கமானது இச்சந்தையில் விற்கப்படுகின்ற பொருளின் அலகொன்றிற்கு ரூபா 20 இற்குச் சமமான ஒரு குறைந்தபட்ச விலையினை விதிப்பதாகக் கருதுக. இது,
(1) சந்தையில் 20 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகை நிரம்பலிற்கு வழிவகுக்கும்.
(2) சந்தையில் 28 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகை நிரம்பலிற்கு வழிவகுக்கும்.
(3) சந்தையில் 28 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகைக் கேள்விக்கு வழிவகுக்கும்.
(4) சந்தையில் 20 அலகுகளுக்குச் சமமான ஒரு மிகைக் கேள்விக்கு வழிவகுக்கும்.
(5) சந்தையில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்த மாட்டாது. (......)

16. 'குறைந்துசெல்லும் விளைவு விதி' குறிப்பது,
(1) தொழிற்சாலையின் பருமன் அதிகரிக்கும்போது அதன் எல்லை உற்பத்தியானது படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.
(2) தொழிற்சாலையின் பருமன் அதிகரிக்கும்போது அதன் சராசரி செலவானது படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.
(3) நிலையான உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு நிறுவனமானது ஒரு மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும்போது, அதன் எல்லை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.
(4) நிலையான உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு நிறுவனமானது ஒரு மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதன் சராசரிச் செலவு படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும்.
(5) மாறும் உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு நிறுவனமானது ஒரு நிலையான உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதன் எல்லை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதனையாகும். (......)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**17.** உற்பத்தியில் உள்ளார்ந்த செலவுகள் காணப்படும்போது,
(1) கணக்கீட்டு இலாபமானது பொருளாதார இலாபத்தை விட கூடுதலாகக் காணப்படும்.
(2) பொருளாதார இலாபமானது எப்போதும் பூச்சியமாகக் காணப்படும்.
(3) பொருளாதார இலாபமானது கணக்கீட்டு இலாபத்தை விட கூடுதலாகக் காணப்படும்.
(4) கணக்கீட்டு இலாபமானது எப்போதும் பூச்சியமாகக் காணப்படும்.
(5) பொருளாதார இலாபமும் கணக்கீட்டு இலாபமும் ஒன்றுக்கொன்று சமமாகக் காணப்படும். (......)

**18.** பின்வருவனவற்றில் நிறைப்போட்டிச் சந்தையொன்றின் பண்பு **அல்லாதது** எது ?
(1) தனி நிறுவனம் எவ்வித குறிப்பிடத்தக்க சந்தைச் சக்தியினையும் கொண்டிருக்க மாட்டாது.
(2) சந்தைக் கேள்வி வளையியானது பூரண நெகிழ்ச்சியுடையதாகக் காணப்படும்.
(3) பொருளின் விலையினைப் பாதிக்காமல் எந்தத் தனி நிறுவனமும் அதன் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரிக்கலாம்.
(4) தற்போது காணப்படும் நிறுவனங்கள் புதிய நிறுவனங்களின் உள்வருகையைத் தடுக்க முடியாது.
(5) சந்தையில் அதிகளவான கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் காணப்படுகின்றனர். (......)

**19.** பின்வரும் அட்டவணையானது நிறைபோட்டிச் சந்தையினதும் தனியுரிமைப் போட்டிச் சந்தையினதும் சில எடுகோள்களைக் காட்டுகின்றது. எடுகோள்களின் எச்சேர்க்கையானது இச்சந்தைகளுடன் இசைந்துச் செல்வதாக உள்ளது ?

| | **நிறைபோட்டி** | **தனியுரிமைப்போட்டி** |
|---|---|---|
| (1) | ஒரே வகையான உற்பத்திப்பொருள் | உட்பிரவேசத்திற்கும் வெளியேற்றத்திற்குமான தடைகள் |
| (2) | வேறுபட்ட உற்பத்திப்பொருட்கள் | ஒரே வகையான உற்பத்திப்பொருள் |
| (3) | அதிகளவான விற்பனையாளர்கள் | குறைந்தளவான விற்பனையாளர்கள் |
| (4) | உட்பிரவேசத்திற்கும் வெளியேற்றத்திற்குமான தடைகள் | பூரணமான தகவல்கள் |
| (5) | அதிகளவான விற்பனையாளர்கள் | வேறுபட்ட உற்பத்திப்பொருட்கள் |

(......)

**20.** நிறைபோட்டிக் கைத்தொழிலிலுள்ள ஒரு நிறுவனமானது குறுங்காலத்தில் பின்வரும் சூழ்நிலையினை எதிர்கொள்கின்றது.

| | |
|---|---|
| நிகழ்கால வெளியீட்டு மட்டம் | = 500 அலகுகள் |
| சந்தை விலை | = அலகொன்றிற்கு ரூபா 6 |
| மொத்தச் செலவு | = ரூபா 5 000 |
| மொத்த நிலையான செலவு | = ரூபா 1 000 |
| எல்லைச் செலவு | = ரூபா 6 |

இலாபத்தை உச்சப்படுத்தும் நோக்கில் செயல்படும் இந்நிறுவனம்,
(1) வெளியீட்டைக் குறைக்கும் அதேவேளை தொடர்ந்து உற்பத்திசெய்ய வேண்டும்.
(2) அதன் விற்பனை விலையை அதிகரிக்க வேண்டும்.
(3) வெளியீடு மாற்றமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
(4) வெளியீட்டினை பூச்சிய நிலைக்குக் குறைக்க வேண்டும்.
(5) வெளியீட்டினை அதிகரிக்கும் அதேவேளை விலையை நிலையாகப் பேண வேண்டும். (......)

**21.** வர்த்தக சகட ஓட்டத்தின் வரிசைக் கட்டங்கள்
(1) சுருக்கம், விரிவாக்கம், தாழ்வு மட்டம், உச்சம்
(2) சுருக்கம், உச்சம், விரிவாக்கம், தாழ்வு மட்டம்
(3) சுருக்கம், தாழ்வு மட்டம், உச்சம், விரிவாக்கம்
(4) சுருக்கம், தாழ்வு மட்டம், விரிவாக்கம், உச்சம்
(5) சுருக்கம், உச்சம், தாழ்வு மட்டம், விரிவாக்கம் (......)

**22.** பின்வரும் செலவினங்களில் எது மொத்த நிலையான மூலதன உருவாக்கம் கணிப்பிடப்படும்போது உள்ளடக்கப்படும்?
(1) புதிதாகக் கட்டப்பட்ட வீடொன்றினைக் கொள்வனவு செய்தல்
(2) புதிய ஆடம்பரக் கார் ஒன்றினைக் கொள்வனவு செய்தல்
(3) ஒரு தயாரிப்புத்துறைக் கம்பனியின் இருப்பில் 1 000 பங்குகளைக் கொள்வனவு செய்தல்
(4) இருப்புகளை விற்பதற்காக ஓர் இருப்புத் தரகருக்கு தரகுப் பணம் செலுத்துதல்
(5) ஐந்து ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளப் பயிர்ச்செய்கைக்காக பணம் செலவிடப்படல் (......)

**23.** ஒரு நாட்டில் இரண்டு காலப்பகுதிகளுக்கு இடையே நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அண்ணளவாக 8% ஆல் அதிகரித்த அதேவேளை மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அதே காலப்பகுதியில் 2% ஆல் வீழ்சியடைந்துள்ளதாகக் கருதுக. பின்வரும் விளக்கங்களில் எது இதனை விளக்குவதற்கு மிகப் பொருத்தமாக அமையும் ?
(1) பொது விலைமட்டம் 4% ஆல் வீழ்ச்சியடைந்தது.
(2) பொது விலைமட்டம் 8% ஆல் வீழ்ச்சியடைந்தது.
(3) பொது விலைமட்டம் 4% ஆல் அதிகரித்தது.
(4) பொது விலைமட்டம் 8% ஆல் அதிகரித்தது.
(5) பொது விலைமட்டம் 10% ஆல் அதிகரித்தது. (......)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**24.** பின்வருவனவற்றில் எதில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு ஒரு பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் ஒரு வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கக்கூடும் ?

(1) நுகர்வுச் செலவினம்
(2) அரசாங்கக் கொள்வனவுகள்
(3) இறக்குமதிச் செலவினம்
(4) முதலீட்டுச் செலவினம்
(5) வெளிநாட்டுப் பண அனுப்புதல்களின் உட்பாய்ச்சல் (......)

**25.** ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் மொத்த நுகர்வுச் சமன்பாடு $C = 200 + 0.8Y$ ஆகவும் சமனிலைத் தேசிய வருமான மட்டம் ரூபா 4 000 பில்லியனாகவும் காணப்படுவதாகக் கருதுக. இப்பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது ?

(1) ரூபா 1 600 பில்லியன்
(2) ரூபா 600 பில்லியன்
(3) ரூபா 400 பில்லியன்
(4) ரூபா 380 பில்லியன்
(5) ரூபா 300 பில்லியன் (......)

**26.** குறித்தவொரு பொருளாதாரம் தற்போது ரூபா 3 000 பில்லியன் சமனிலை வெளியீட்டு மட்டத்தில் தொழிற்படுவதாகவும் நிறைதொழில் மட்டச் சமனிலையினை அடைவதற்கு அது வெளியீட்டினை ரூபா 4 000 பில்லியன் மட்டத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய தேவையில் உள்ளது எனவும் கருதுக. மேலும் இப்பொருளாதாரத்தின் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 ஆக உள்ளது. இப்பொருளாதாரம் நிறைதொழில் மட்டச் சமனிலையினை அடைவதற்கு மிகவும் பொருத்தமான கொள்கைச் சிபாரசு யாது ?

(1) அரச செலவினத்தை ரூபா 1 000 பில்லியனால் அதிகரித்தல்
(2) அரச செலவினத்தை ரூபா 500 பில்லியனால் அதிகரித்தல்
(3) அரச செலவினத்தை ரூபா 250 பில்லியனால் அதிகரித்தல்
(4) நேர் வரிகளை ரூபா 1 000 பில்லியனால் குறைத்தல்
(5) நேர் வரிகளை ரூபா 250 பில்லியனால் குறைத்தல் (......)

**27.** பின்வரும் அட்டவணையானது அரசாங்கத் துறையினைக் கொண்டுள்ள ஒரு திறந்த பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தின் பிரிவுகள் மற்றும் தேசிய வருமானம் தொடர்பான தரவுகளைக் காட்டுகின்றது. இங்கு C = நுகர்வுச் செலவினம், I = முதலீடு, G = அரசாங்கக் கொள்வனவுகள், X = ஏற்றுமதிகள், M = இறக்குமதிகள், Y = தேசிய வருமானம் எனக் கருதுக.

எந்தச் சூழ்நிலையில் இப்பொருளாதாரம் சமனிலையின்மையில் காணப்படுகின்றது ?
(அனைத்துத் தொகைகளும் ரூபா பில்லியனில் உள்ளன.)

| | C | I | G | X | M | Y |
|---|---|---|---|---|---|---|
| (1) | 250 | 50 | 100 | 75 | 25 | 400 |
| (2) | 300 | 50 | 100 | 75 | 25 | 500 |
| (3) | 450 | 50 | 100 | 75 | 25 | 650 |
| (4) | 600 | 50 | 100 | 75 | 25 | 800 |
| (5) | 750 | 50 | 100 | 75 | 25 | 950 |

(......)

**28.** 'பணத்தின் பெறுமானம்' என்பதனால் கருதப்படுவது யாது ?

(1) ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தினால் கொள்வனவு செய்யப்படக்கூடிய பொருட்களினதும் சேவைகளினதும் அளவு
(2) பண வடிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள செல்வத்தின் அளவு
(3) மத்திய வங்கியில் ஒதுக்குகளாக வைக்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவு
(4) குத்தி மற்றும் தாள் நாணயங்களின் உற்பத்திச் செலவு
(5) பண வடிவில் செல்வத்தை வைத்திருப்பதற்கான சந்தர்ப்பச் செலவு (......)

**29.** பணவீக்க இடைவெளியை குறைக்கத்தக்கதாய் இருப்பது,

(1) அரச செலவினத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பினால் ஆகும்.
(2) பண நிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பினால் ஆகும்.
(3) வருமான வரி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பினால் ஆகும்.
(4) மத்திய வங்கியின் கழிவு வீதத்தில் ஏற்படும் ஒரு குறைப்பினால் ஆகும்.
(5) சட்டரீதியான நியதி (statutory) ஒதுக்கு வீதத்தில் ஏற்படும் ஒரு குறைப்பினால் ஆகும். (......)

**30.** பெறுமதி சேர்க்கப்பட்ட வரியில் (VAT) ஏற்படும் ஓர் அதிகரிப்பு கேள்வித் தூண்டற் பணவீக்கம் மற்றும் செலவுத் தூண்டற் பணவீக்கம் என்பவற்றின் மீது ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான விளைவுகள் எவை ?

| | கேள்வித் தூண்டற் பணவீக்கம் | செலவுத் தூண்டற் பணவீக்கம் |
|---|---|---|
| (1) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (2) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (3) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (4) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (5) | அதிகரிப்பு | பாதிப்பில்லை |

(......)

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**31.** பின்வரும் சொத்துக்களில் அதிகம் திரவத்தன்மை வாய்ந்தது எது ?
(1) சேமிப்பு வைப்புகள் (2) திறைசேரி உண்டியல்கள்
(3) கேள்வி வைப்புகள் (4) திறைசேரி முறிகள்
(5) மெய்ச் சொத்துக்கள் (Real estate) (......)

**32.** ஒரு வணிக வங்கியிலுள்ள உமது வைப்புக் கணக்கில் ரூபா 10 000 இனை நீர் வைப்பிலிடுவதாகக் கருதுக. வங்கியானது அனைத்து வைப்புகளினதும் 20% இனை ஒதுக்காகப் பேண விரும்பினால் உமது வைப்பின் நேரடி விளைவாக இவ்வங்கி எவ்வளவு புதிய வைப்புகளை உருவாக்க முடியும் ?
(1) ரூபா 8 000 (2) ரூபா 10 000 (3) ரூபா 40 000 (4) ரூபா 50 000 (5) ரூபா 52 000 (......)

**33.** மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி வீதத்தினைக் குறைக்கும்போது பின்வருவனவற்றில் எது நடைபெறும் ?
(1) பணக் கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(2) பணக் கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
(3) பண நிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(4) பண நிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(5) பணக் கேள்வி, பண நிரம்பல், சந்தை வட்டி வீதங்கள் ஆகியன அதிகரிக்கும். (......)

**34.** தனது பணக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய பிரதான குறிக்கோள்
(1) நடுத்தர காலப்பகுதியில் நடு ஒற்றையிலக்கப் பணவீக்கத்தினை உறுதிப்படுத்தல்
(2) ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினை ஓர் உறுதியான மட்டத்தில் பேணுதல்
(3) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை நிதியீட்டத்தில் அரசாங்கத்திற்கு வசதி செய்து கொடுத்தல்
(4) நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியினை அடைதல்
(5) அரச படுகடன் சுமையினைக் குறைத்தல் (......)


**35.** திறந்த சந்தையில் மத்திய வங்கியானது பிணையங்களை விற்பனை செய்யுமானால் பண நிரம்பலுக்கும் சமனிலை வட்டி வீதத்திற்கும் என்ன நடைபெறும் ?

| | பண நிரம்பல் | சமனிலை வட்டி வீதம் |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| (4) | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| (5) | வீழ்ச்சியடையும் | மாற்றமில்லை |

(......)

**36.** ஒரு தூய பொதுப் பொருளுக்கான ஓர் உதாரணம்
(1) சுகாதார சேவை (2) தேசிய நூதனசாலை (3) தேசிய பாதுகாப்பு
(4) புகையிரத போக்குவரத்துச் சேவை (5) கல்வி (......)

**37.** ஒரு குறிப்பிட்ட பொருளுக்கான எல்லை தனியார் நலன் (MPB), எல்லைச் சமூக நலன் (MSB) வளையிகள் மற்றும் சந்தை நிரம்பல் வளையி (S) என்பன பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.




இச்சந்தையில் அரசாங்கத்தின் தலையீடு காணப்படாதபோது வளங்கள் உரிய முறையில் ஒதுக்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஏனெனில்,
(1) தாராள சந்தை விலையானது மிகவும் கூடுதலாக உள்ளது.
(2) H-J அளவில் பொருள் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது.
(3) தாராள சந்தை வெளியீடானது மிகவும் கூடுதலாக உள்ளது.
(4) H-J அளவில் பொருள் குறைவாக நுகரப்படுகின்றது.
(5) நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்படுகின்றது. (......)

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


**38.** இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானமும் அரசாங்கச் செலவினமும் அண்மைய ஆண்டுகளில் அண்ணளவாகப் பின்வருமாறு காணப்பட்டன.

| | வருமானம்/மொ.உ.உ. விகிதம் (%) | செலவினம்/மொ.உ.உ. விகிதம் (%) |
|---|---|---|
| (1) | 15 - 16 | 25 - 26 |
| (2) | 12 - 13 | 24 - 25 |
| (3) | 13 - 14 | 20 - 21 |
| (4) | 10 - 11 | 15 - 16 |
| (5) | 15 - 16 | 18 - 19 |

(……)

**39.** இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைச் செலவினத்தின் பிரதான பிரிவுகள் மொத்தச் செலவினத்தில் அவற்றின் சார்பளவு முக்கியத்துவத்தின்படி வரிசைப்படுத்தப்பட்டால், அவற்றின் ஒழுங்குமுறை
(1) வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்களும் கூலிகளும்
(2) சம்பளங்களும் கூலிகளும், வட்டிக் கொடுப்பனவுகள், வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள்
(3) அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்களும் கூலிகளும்
(4) வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள், சம்பளங்களும் கூலிகளும், வட்டிக் கொடுப்பனவுகள்
(5) வட்டிக் கொடுப்பனவுகள், அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள், வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள் (……)

**40.** அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதில் பரந்தளவில் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டுக் கொடுகடன் கருவியாக இருந்துள்ளது
(1) திறைசேரி உண்டியல்கள்
(2) திறைசேரி முறிகள்
(3) ரூபா பிணையங்கள்
(4) இலங்கை அபிவிருத்தி முறிகள்
(5) மத்திய வங்கியின் முற்பணங்கள் (……)

**41.** ஜப்பானில் ஓர் அலகு துணியினை உற்பத்திசெய்வதற்கு 50 ஊழிய மணித்தியாலங்களும் ஓர் அலகு அரிசியை உற்பத்திசெய்வதற்கு 100 ஊழிய மணித்தியாலங்களும் செலவாகின்றன. தாய்லாந்தில் ஓர் அலகு துணியினை உற்பத்திசெய்வதற்கு 200 ஊழிய மணித்தியாலங்களும் ஓர் அலகு அரிசியை உற்பத்திசெய்வதற்கு 200 ஊழிய மணித்தியாலங்களும் செலவாகின்றன. இந்நிலைமைக்குப் பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது ?
(1) அரிசி உற்பத்தியில் ஜப்பான் ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(2) அரிசி உற்பத்தியில் தாய்லாந்து முழு நன்மையினைக் கொண்டுள்ளது.
(3) துணி உற்பத்தியில் ஜப்பான் ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(4) துணி உற்பத்தியில் தாய்லாந்து ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது.
(5) இரு நாடுகளும் துணியை உற்பத்திசெய்ய வேண்டும். (……)

**42.** சர்வதேச வர்த்தகமானது ஒரு நாட்டினை,
(1) அதன் உற்பத்திச் சாத்திய எல்லைக்கு அப்பால் உற்பத்திசெய்யவும் நுகரவும் அனுமதிக்கின்றது.
(2) அதன் உற்பத்திச் சாத்திய எல்லையினை வெளிப்புறமாக நகர்த்துவதற்கு அனுமதிக்கின்றது.
(3) அது உற்பத்திசெய்யும் அனைத்துப் பொருள்களினதும் ஒவ்வோர் அலகுக்குமான உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கு அனுமதிக்கின்றது.
(4) அதன் நுகர்வுச் சாத்தியங்களை நிலையாகப் பேணிக் கொண்டு அதன் உற்பத்திச் சாத்தியங்களை விரிவாக்குவதற்கு அனுமதிக்கின்றது.
(5) அதன் உற்பத்திச் சாத்திய எல்லைக்கு அப்பால் நுகர்வதற்கு அனுமதிக்கின்றது. (……)

**43.** சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கையும் நிதியியல் கணக்கையும் கூட்டும்போது அதற்குச் சமனாக வருவது
(1) பூச்சியம்
(2) ஒன்று
(3) வர்த்தக நிலுவை
(4) தேறிய மூலதனக் கணக்கு நிலுவை
(5) தேறிய சர்வதேச ஒதுக்குகள் (……)

**44.** இலங்கை ரூபாவுக்கு எதிராக ஜப்பான் யென்னின் விலை கணிசமான அளவு வீழ்ச்சியடையுமானால்,
(1) ஜப்பானிய நுகர்வோருக்கு இலங்கைப் பொருட்கள் சார்பளவில் மலிவானவையாக இருக்கும்.
(2) இலங்கை நுகர்வோருக்கு ஜப்பானியப் பொருட்கள் சார்பளவில் மலிவானவையாக இருக்கும்.
(3) இலங்கை ரூபாவுக்கான கேள்வி ஜப்பானில் அதிகரிக்கும்.
(4) இது அதிகளவான ஜப்பானிய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஊக்கமளிக்கும்.
(5) இது அதிகளவான இலங்கை உல்லாசப் பயணிகள் ஜப்பானுக்குச் செல்வதை ஊக்கமிழக்கச் செய்யும். (……)

[பக். 8 ஐப் பார்க்க


Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**45.** ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கொள்வனவுச் சக்தி சமமதிப்பு அடிப்படையிலான ஒரு பொருளாதாரத்தின் மொத்த தேசிய வருமான (GNI) தலா வருமானமானது அதிகரித்துள்ள போதிலும் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணினால் அளவிடப்படும் அதன் அபிவிருத்தியானது மாற்றமடையாமல் இருந்தது. இவ்வேறுபாட்டினை எவ்வாறு விளக்கலாம் ?
(1) குழந்தைகளுக்கான பாடசாலைக் கல்வியின் எதிர்பார்க்கப்படும் வருடங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு
(2) பிறப்பில் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி
(3) வயதுவந்தோர் எழுத்தறிவு வீதத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி
(4) பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு
(5) சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு (……)

**46.** ஒரு பொருளாதாரத்தில் வீட்டுத்துறை வருமானப் பங்கீட்டினை எடுத்துக்காட்டும் லோரன்ஸ் வளையி பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




இப்பொருளாதாரத்தின் வருமானப் பங்கீட்டிலுள்ள சமமின்மையைக் காட்டும் கினிக் குணகம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது ?
(1) (பகுதி A இன் பரப்பளவு + பகுதி B இன் பரப்பளவு) ÷ பகுதி C இன் பரப்பளவு
(2) பகுதி B இன் பரப்பளவு ÷ பகுதி C இன் பரப்பளவு
(3) பகுதி A இன் பரப்பளவு ÷ (பகுதி B இன் பரப்பளவு + பகுதி C இன் பரப்பளவு
(4) பகுதி B இன் பரப்பளவு ÷ (பகுதி B இன் பரப்பளவு + பகுதி C இன் பரப்பளவு)
(5) பகுதி C இன் பரப்பளவு ÷ (பகுதி A இன் பரப்பளவு + பகுதி B இன் பரப்பளவு) (……)

**47.** கற்பனைரீதியான பொருளாதாரமொன்றின் ஊழியர் சந்தை தொடர்பான சில தரவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொழில்புரியும் வயது சனத்தொகை (மில்லியன்) | வேலையற்றோர் சனத்தொகை (மில்லியன் | வேலையின்மை வீதம் (%) |
|---|---|---|
| 25 | 3 | 80 |

இப்பொருளாதாரத்தின் ஊழியப்படை பங்குபற்றல் வீதம்
(1) 20% (2) 30% (3) 40% (4) 50% (5) 60% (……)

**48.** 2012/13 வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவினக் கருத்தாய்வின்படி இலங்கையில் கூடிய தலைக்குரிய வறுமை விகிதத்தினைக் கொண்ட மூன்று மாவட்டங்கள்
(1) முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார் (2) மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி
(3) மன்னார், முல்லைத்தீவு, பதுளை (4) மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி
(5) முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மொனராகலை (……)

**49.** இலங்கையில் முழு வறுமை மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளபோதிலும் குறிப்பிடத்தக்களவு வருமான ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் நிலவுகின்றன. மொத்த வீட்டுத்துறை வருமானத்தில் 10% செல்வந்த வீட்டுத்துறையினர் கொண்டுள்ள வீதத்தினால் இது உறுதிப்படுத்தப்படுகின்றது. மொத்த வீட்டுத்துறை வருமானத்தில் 10% ஆன செல்வந்தர்கள் கொண்டுள்ள வீதம்
(1) 10.9% (2) 14.9% (3) 28.6%
(4) 38.0% (5) 57.5% (……)

**50.** பின்வருவனவற்றில் எது இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவர்வதில் பிரதான இடையூறாக **அமையாதது** ?
(1) உறுதியற்ற பேரினப் பொருளாதார நிலைமைகள்
(2) ஊழியச் சந்தை தொடர்பான இறுக்க நிலைமைகள்
(3) கொள்கைகளின் நிச்சயமற்ற தன்மை
(4) ஊழலும் பலவீனமான ஒழுங்குவிதிமுறைகளும்
(5) ஏற்றுமதித் துறையில் பன்முகப்படுத்தல் போதாமலிருப்பது (……)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

14/52

AL/2017/21/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | |
|---|---|---|
| ආර්ථික විද්‍යාව II<br>பொருளியல் II<br>Economics II | 21 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |


**அறிவுறுத்தல்கள் :**

- ✳ உப பிரிவு **'அ'**, உப பிரிவு **'ஆ'** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ✳ வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) பின்வரும் வரைபடமானது குடிசார் (civil) மற்றும் இராணுவப் பொருட்களை மட்டும் உற்பத்திசெய்யும் பொருளாதாரம் ஒன்றிற்கான ஓர் உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகின்றது. இப்பொருளாதாரம் தற்போது புள்ளி K இல் உற்பத்தி செய்வதாகக் கருதுக.




(அ) இப்பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியானது அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பச் செலவுகளைக் காட்டுகின்றதா ? விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரமானது யுத்தம் ஒன்றிற்குச் செல்ல வேண்டியேற்பட்டால், உற்பத்திப்புள்ளி K இலிருந்து பெரும்பாலும் எப்புள்ளியை நோக்கி நகரக் கூடும் ? விளக்குக. (02 புள்ளிகள்)

(இ) பொருளாதாரமானது ஒரு மந்த நிலையினை அடைந்தால், உற்பத்திப்புள்ளி K இலிருந்து எப்புள்ளியை நோக்கி நகரக் கூடும் ? விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) தொழிற்பிரிப்பானது ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டத்தினை ஏன் அதிகரிக்கின்றது என்பதனை விளக்கும் **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) ஓர் உற்பத்தி சாத்திய வளையியின் உதவியுடன் அருமை என்னும் எண்ணக்கருவினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைகள் எவ்வாறான தொழிற்பாடுகளைப் புரிகின்றன ? (03 புள்ளிகள்)

(v) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**2.** (i) ஒரு பொருளுக்கான கேள்வி மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய அப்பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கேள்வி மாற்றத்தினையும் கேள்வித் தொகை மாற்றத்தினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) 'நிரம்பல் விதியினை' வரைவிலக்கணப்படுத்தி, நிரம்பல் விதியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு பொருளுக்கு வழங்கப்படும் உற்பத்தி மானியமானது உற்பத்தியாளர்கள் அனுபவிக்கும் மிகையினை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதனை ஒரு கேள்வி, நிரம்பல் வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(v) ஓர் அத்தியாவசிய நுகர்வுப் பொருள் மீது அரசாங்கம் உயர்ந்தபட்ச விலையினை விதிப்பதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை ? (05 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

**3.** (i) ஒரு நிறுவனத்தின் குறுங்கால செலவு வளையிகளின் வடிவத்துடன் குறைந்து செல்லும் விளைவு விதி எவ்வாறு தொடர்புபடுகின்றது ? (04 புள்ளிகள்)

(ii) குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி மொத்தச் செலவிற்கும் சராசரி மாறும் செலவிற்கும் இடையிலான வேறுபாட்டிற்கு என்ன நடக்கின்றது ? விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வருவன எவ்வாறு சராசரி மொத்தச் செலவினையும் சராசரி மாறும் செலவினையும் பாதிக்கின்றன ?

(அ) மின்சாரக் கட்டணத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(ஆ) கூலி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(இ) பிரதான நிறைவேற்று அதிகாரியின் சம்பளத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(ஈ) ஒரு நிறுவனத்தின் கட்டடங்களுக்கான வாடகைச் செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (04 புள்ளிகள்)

(iv) நிறைபோட்டிச் சந்தைக் கட்டமைப்பிற்கும் சிலருரிமைச் சந்தைக் கட்டமைப்பிற்கும் இடையிலான **இரண்டு** வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) சாதாரண இலாபத்தையும் அசாதாரண இலாபத்தையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

**4.** (i) வருமான வட்டப் பாய்ச்சலிலிருந்தான 'உட்பாய்ச்சல்கள்' மற்றும் 'வெளிப்பாய்ச்சல்கள்' என்பவற்றினால் கருதப்படுவது யாது என்பதனை விளக்கி, அரசாங்க நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு திறந்த பொருளாதாரத்தின் மொத்தச் செலவில் ஏற்படும் வெளிப்பாய்ச்சல்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

(ii) மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் பிரதான கூறுகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை விளக்கி, சந்தை விலைகளில் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எவ்வாறு தேறிய தேசிய வருமானத்திலிருந்து வேறுபடுகின்றது என்பதனைக் காட்டுக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு வர்த்தக சகட ஓட்ட விரிவாக்கமானது பொருளாதார வளர்ச்சியிலிருந்து வேறுபட்டிருக்கும் என நாம் ஏன் கருதுகின்றோம் ? (04 புள்ளிகள்)

(v) ஒரு பொருளாதாரத்திற்கான 2016 ஆம் ஆண்டுக்குரிய பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்படுகின்றன. (அனைத்துத் தொகைகளும் ரூபா பில்லியன்களில் உள்ளன.)

| வகை | பெறுமதி |
|---|---|
| மொத்த முதலீடு (I) | 200 |
| வரிகள் (T) | 550 |
| ஏற்றுமதிகள் (X) | 375 |
| நுகர்வுச் செலவு (C) | 700 |
| மாற்றல் கொடுப்பனவுகள் ($T_R$) | 300 |
| இறக்குமதிகள் (M) | 325 |
| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | 300 |

(அ) இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரத்தின் தனிநபர் செலவிடத்தக்க வருமானம் யாது ? (02 புள்ளிகள்)

**5.** (i) எளிய பொருளாதாரம் ஒன்றிற்கான மொத்த நுகர்வுச் சார்பானது $C = 100 + 0.8Y$ எனவும் முதலீடு $I = 200$ எனவும் தரப்படுவதாகக் கருதுக.

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம் யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) சமநிலையில் சேமிப்பு மட்டம் யாது ? (02 புள்ளிகள்)

(இ) சில காரணங்களினால் பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டு மட்டமானது 1 700 ஆகக் காணப்பட்டால் தன்விருப்பற்ற (involuntary) இருப்பின் திரட்சி மட்டமானது எந்தளவாக இருக்கும் ? (02 புள்ளிகள்)

(ii) அரசாங்கக் கொள்வனவுகளில் (G) ஏற்படும் ரூபா 500 மில்லியன் குறைப்பானது வரியில் (T) ஏற்படும் ரூபா 500 மில்லியன் அதிகரிப்பை விட ஏன் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக வீழ்ச்சியினை உருவாக்கும் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (Y) ரூபா 6 000 மில்லியன் எனவும் தனிநபர் செலவிடத்தக்க வருமானம் ரூபா 5 100 மில்லியன் எனவும் அரசாங்க வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 200 மில்லியன் எனவும் நுகர்வுச் செலவினம் ரூபா 3 800 மில்லியன் எனவும் வர்த்தகப் பற்றாக்குறை ரூபா 100 மில்லியன் எனவும் கருதுக.

(அ) சேமிப்பு (S) யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) முதலீட்டின் (I) அளவு யாது ? (02 புள்ளிகள்)

(இ) அரசாங்கச் செலவினம் (G) யாது ? (02 புள்ளிகள்)

(iv) "தேசிய வருமானத்தின் சமநிலை மட்டமானது தேசிய வருமானத்தின் நிறைதொழில் மட்டத்திற்குச் சமமாக இருக்க வேண்டிய **அவசியமில்லை.**" இக்கூற்றினை விளக்குக. (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



## உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) முதன்மைப் பணவீக்கத்தினையும் மையப் பணவீக்கத்தினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) மொத்தச் செலவினத்தின் கூறுகளை இனங்கண்டு, ஒரு பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் ஏற்படும் அதிகரிப்பானது எவ்வாறு பணவீக்கத்திற்கு வழிவகுக்கக் கூடும் என்பதனை ஒரு வரைபடத்தின் உதவியுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) வணிக வங்கி ஒன்றின் ஐந்தொகை கீழே தரப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | பெறுமதி (ரூபா மில்லியன்) | சொத்துக்கள் | பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 180 000 | ஒதுக்குகள் | 100 000 |
| | | திறைசேரி முறிகள் | 40 000 |
| | | கடன்கள் | 40 000 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **180 000** | **மொத்தச் சொத்துக்கள்** | **180 000** |

(அ) சட்டரீதியான நியதி ஒதுக்கு வீதம் 10% எனில் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய உச்ச அளவிலான புதிய கடன்களின் தொகை யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வங்கியிலிருந்து ரூபா 10 000 மில்லியன் வைப்புக்கள் மீளப் பெறப்பட்டால் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவிலான தொகை யாது ? (02 புள்ளிகள்)

(iv) உயர் வலுப் பணம் என்பதனால் நீர் கருதுவது யாது ? பொருளாதாரத்தில் மத்திய வங்கியானது உயர் வலுப் பண இருப்பின் மீது ஒரு பூரண கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்குமா ? காரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

(v) இலங்கை மத்திய வங்கியால் தற்போது பின்பற்றப்படுகின்ற பணக் கொள்கை வரைச்சட்டத்தின் பிரதான நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

**7.** (i) தூய பொதுப் பொருள் என்றால் என்ன ? இது எவ்வாறு ஓர் அரைப் பொதுப் பொருளிலிருந்து வேறுபடுகின்றது ? (04 புள்ளிகள்)


(ii) ஒரு தாராள சந்தையானது ஏன் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருட்களை அளவுக்கதிகமாக உற்பத்தி செய்கின்றது ? பொருத்தமான வரைபடமொன்றைப் பயன்படுத்தி உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் கலால் வரி (excise taxes) வருமானத்தின் பிரதான மூலங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(iv) "இலங்கையில் அரச நிதி நிலைமைகள் அபாயகரமான நிலைமையில் காணப்படுகின்றன" (கொள்கைக் கற்கைகளுக்கான நிறுவகம்). இலங்கையின் தற்போதைய அரச நிதி நிலைமைகளில் காணப்படும் பிரதான பலவீனங்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

(v) அரச நிதிகள் தொடர்பாகக் காணப்படும் மிகத் தீவிர பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக இலங்கை அரசாங்கத்தினால் அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**8.** (i) பின்வரும் வரைபடமானது, செல்லிடத்தொலைபேசிகளையும் துவிச்சக்கர வண்டிகளையும் உற்பத்தி செய்யும் A, B ஆகிய நாடுகளின் உற்பத்திச் சாத்திய வளையிகளைக் காட்டுகின்றது.




(அ) ஒவ்வொரு நாட்டிலும் ஒரு துவிச்சக்கர வண்டியை உற்பத்திசெய்யும்போது ஏற்படும் சந்தர்ப்பச் செலவு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) செல்லிடத்தொலைபேசிகளை உற்பத்திசெய்வதில் எந்த நாடு ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளது ? (02 புள்ளிகள்)

(இ) இரண்டு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையளிக்கும் வண்ணம் வர்த்தகம் இடம்பெறுவதற்கு செல்லிடத்தொலைபேசிகளுக்கும் துவிச்சக்கர வண்டிகளுக்கும் இடையிலான பரிமாற்று வீதம் என்னவாக இருக்க வேண்டும் ? (02 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(ii) “கடந்த இரண்டு தசாப்தங்களாக பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் ஏற்றுமதித்துறையின் செயலாற்றமானது குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.” இலங்கையின் ஏற்றுமதித்துறையின் மந்தமான செயலாற்றத்திற்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது அந்நாட்டின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கினை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) “வெளிநாட்டு உறுதிப்பாடு (external stability)” என்பதனாற் கருதப்படுவது யாதென்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(v) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு ஜி. எஸ். பி. பிளஸ் (GSP+) தீர்வைச் சலுகைகள் மீள வழங்கப்பட்டமையினால் கிடைக்கக்கூடிய நன்மைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**9.** (i) ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை மதிப்பிடுவதற்கான ஓர் அளவீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியினை பயன்படுத்துவதிலுள்ள வரையறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) ‘உற்பத்தி இயலளவு’ என்னும் எண்ணக்கருவை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iv) இலங்கையில் வறுமை எவ்வாறு அளவிடப்படுகின்றது ? (05 புள்ளிகள்)

(v) சனத்தொகை மூப்படைவதனால் இலங்கை எதிர்நோக்கும் பிரதான பொருளாதாரச் சவால்கள் யாவை ? (05 புள்ளிகள்)

**10.** (i) இலங்கையில் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஓர் உபாயமாக அரச-தனியார் பங்குடைமையின் (PPP) அனுகூலங்கள் யாவை ? (05 புள்ளிகள்)

(ii) “வியாபாரத்தை இலகுவாகச் செய்தல் மற்றும் முதலீட்டுக்கான சூழல் என்பன தொடர்பில் இலங்கை தொடர்ச்சியாக மந்தமாகவே தொழிற்படுகின்றது.” இலங்கையில் வியாபாரம் செய்வதிலுள்ள மிக முக்கிய பிரச்சினையான காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

(iii) “உல்லாசப் பயணக் கைத்தொழிலானது இலங்கைப் பொருளாதாரத்தில் அதி வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக ஆகியுள்ளது.” அன்னிய செலாவணிச் சம்பாத்தியங்கள் மற்றும் வேலைவாய்ப்பு என்பன தொடர்பில் உல்லாசப் பயணக் கைத்தொழிலின் அண்மைக் காலப் பங்களிப்புப் பற்றியும் தற்போது இக்கைத்தொழில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் கருத்துரைக்குக. (05 புள்ளிகள்)

(iv) “இலங்கையில் ஏறக்குறைய அரைவாசி கிராமப்புற வறிய சனத்தொகையானது சிற்றளவு விவசாயிகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.” குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் குறைந்த வருமானங்கள் என்பவற்றுக்குக் காரணமாகவுள்ள உள்நாட்டு விவசாயத்துறையில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை அடையாளங் காண்க. (05 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk